# 15 குமரகுருபரரின் சமயப்பணி

பாண்டி நாட்டில் ஸ்ரீ வைகுண்டம் என்னும் கைலாசபுரத்தில் சைவ வேளாளர் மரபைச் சேர்ந்த சண்முகசிகாமணி கவிராயருக்கும் சிவகாமசுந்தரி அம்மைக்கும் மகனாகக் குமரகுருபரர் அவதரித்தார். நீண்ட காலம் குழந்தைப் பாக்கியம் இல்லாது தவித்த பெற்றோர் விரதங்கள் இருந்தும் திருத்தலங்களுக்குச் சென்றும் வழிபட்டதன் பயனாக அவர்களுக்குக் குருபரர் குழந்தையாகப் பிறந்தார். இவர் தமது ஐந்து வயது வரை ஊமையாக இருந்தார். அவரின் இந்நிலையால் பெற்றோர் பெரிதும் வருந்தினர். ஒரு முறை திருச்செந்தூர்த் திருத்தலத்திற்கு அழைத்துச் சென்று குருபரரின் குறையை நீக்கி அருளுமாறு முருகனிடம் வேண்டினர். செந்திலாண்டவனும் அர்ச்சகர் வடிவில் வந்து குழந்தையின் ஊமை நிலையை நீக்கி அருளினார். இவ்வாறு செந்திலாண்டவரின் திருவருள் பெற்ற குருபரர் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் சமய ஞானமும் பெற்றுப் பல நூல்களைப் படைத்துத் தொண்டாற்றினார். இவரின் தொண்டுகள் யாவும் சிறந்த சமயத் தொண்டுகளாக அமைந்துள்ளன.




அடிகளார் தாம் வாழ்ந்த காலத்தில் இருந்த பல சமய மக்களும் சைவ சமயத்தைப் பின்பற்றும் வகையில் அதன் தொன்மையையும் சிறப்புக்களையும் கொள்கையையும் எடுத்துக் கூறிச் சைவத் தொண்டு செய்தார். அவர் முதலில் பாடிய கந்தர் கலிவெண்பாவினுள் சைவ சித்தாந்தக் கருத்துகள் சிறப்பாகவும் செறிவாகவும் காணப்படுகின்றன. சைவத்தை நிலைநாட்டுவதற்கு அடிகளார் அற்புதங்களையும் பிற சமயத்தவரோடு வழக்காடுதலையும் மேற்கொண்டார். தவிர மொழி, குலம், சமயம் வேறாக இருந்த வடநாட்டிலும் சைவத்தை நிலைநாட்டினார். ஆகவே இந்திய தேசத்தை ஒருமைப்படுத்திய பெருமை அடிகளாருக்கு உண்டு என்பதில் சந்தேகமில்லை.

வைணவ சமயத்தவரான பிள்ளைப்பெருமாள் ஐயங்காருடன் பல இடங்களில் குருபரர் சமயவாதம் புரிந்து சைவத்தின் சிறப்பை நிலைநாட்டினார். ஒரு முறை தில்லையில் ஐயங்கார், “சித்தும் சடமுமாய உலகனைத்தும் கடவுளிடமிருந்து தோன்றுவன. அவை இரண்டையும் இறைவன் தனக்குரிய உடலாகக் கொண்டு அவற்றை தன்னுள் அடக்கியிருக்கிறான்” என்று தமது

சமயக் கொள்கையை நிறுவியதற்கு எதிராக அடிகளார் சைவத்தின் கொள்கையை நிறுவினார். சைவத்தில் இறைவன், ஆன்மா என்பன இரண்டு பொருள்களாகும். இறைவன் ஒன்றாயும், உடனாயும், வேறாயும் இருக்கும். இது அத்துவித சம்பந்தமானது எனச் சைவத்தின் கொள்கையை நிறுவி அடிகளார் வாதத்தில் வென்றார்.

மற்றுமொரு முறை திருவாரூரில் சிவசமயவாதிகளின் கொள்கையை எதிர்த்து வாதம் செய்தார். அவர்கள் முத்தி பெற்ற ஆன்மா இறைவனைப் போன்று ஐந்தொழிலும் செய்யவல்லது என்ற கருத்தைக் கொண்டவர்கள். அக்கருத்தை மறுத்து அவ்வாறு ஆன்மா செயற்பட்டால் கடவுள் பல என்ற நிலை ஏற்படுவதுடன் ஆன்மாவின் இயல்பான சார்ந்து நிற்றல், உணர்த்த உணர்தல் என்பன இல்லாததாகிவிடும் என்று கூறி அவர்களுக்கு சித்தாந்தச் சைவத்தின் முத்தி நிலையினை விளக்கினார்.

காசியில் மொகலாய மன்னன் குருபரரின் கடவுள் பக்தியின் மீது ஐயங்கொண்டான். அவ்வையத்தை நீக்கும் பொருட்டு பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கையிலேந்தி எந்தத் துன்பமுமின்றி நின்று தமது இறைவழிபாட்டின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தினார். இன்னொரு சமயத்தில் மன்னன் விருந்துக்கு அழைத்து அதில் மாமிச உணவைப் பரிமாறினார். சைவ போசகரான அடிகள் அதனை ஏற்றுக்கொள்ளாததோடு மரக்கறி உணவின் சிறப்பையும் புனிதத்தையும் அரசனுக்கு உணர்த்தினார்.

சைவசமயத்தைப் வளர்ப்பதற்கு இலக்கியங்கள் படைப்பதோடு மட்டும் நில்லாது மடங்கள் அமைத்தும் தொண்டாற்றினார். காசியில் சைவமும் தமிழும் தழைக்கவென்று ஒரு திருமடம் அமைத்தார். மேலும், சிவசின்னமான உருத்திராக்கம் நன்கு விளையும் இமய மலைச்சாரலில் ஒரு திருமடம் அமைக்க விரும்பினார். தம் விருப்பத்தை வாகீச முனிவரிடம் தெரிவிக்க, அவரும் நேபாளம் சென்று முகரங்கி என்ற இடத்தில் திருமடம் ஒன்றமைத்து சைவர்களுக்குத் தேவையான உருத்திராக்கங்களை அங்கிருந்து காசிக்கு அனுப்பி வைத்தார்.

குருபரர் மக்களுக்கு சைவ சமயத்தின் சிறப்பினையும், சித்தாந்தக் கருத்துக்களையும், வழிபாட்டு முறைகளையும், புராண வரலாறுகளையும் தாம் அருளிய இலக்கியங்கள் மூலமாக எடுத்துரைத்தார். **கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருவாரூர் நான்மணிமாலை, சகலகலாவல்லி மாலை, சிதம்பர மும்மணிக்கோவை, காசித் துண்டி விநாயகர் பதிகம்** போன்றவை இவர் இயற்றிய நூல்களிற் சிலவாகும். இவை யாவும் சிறந்த இலக்கிய நயங் கொண்டமைந்த நூல்களாகும். இவ்விலக்கியங்கள் அனைத்திலும் சித்தாந்தக் கருத்துகள் அமைந்து காணப்பட்டன.

இவர் வடக்கே காசியிலும், நேபாளத்திலும் மட்டுமன்றித் தெற்கில் திருப்பனந்தாளிலும் அமைத்த மடங்கள் மூலம் பல சமய சமூகப் பணிகளைச்

செய்து வந்தார். அங்கு சித்தாந்த வகுப்புகள் நடத்துவது, சமயச் செற்பொழிவுகள் நடத்துவது என்று பல தொண்டுகளைச் செய்து வந்தார். அடிகள் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள், நாயன்மார் வரலாறுகள், அட்டவீரச் செயல்கள், காமாட்சியின் அறச்செயல் போன்ற பல்வேறு புராணக் கதைகளையும் தமது நூலிலே குறிப்பிட்டுள்ளார். தமிழ்மொழியிலே மட்டுமன்றிச் சமஸ்கிருதத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். இதனால் வடமொழியில் அமைந்த நூல்களைப் படித்துத் தெரிந்து கொண்டதுடன் அவை கூறிய கருத்துகளை எளிமையான தமிழ் நடையில் ஆக்கித்தந்த பெருமையும் அவரையே சாரும்.

இவ்வாறாகக் குமரகுருபரர் வாழ்வியலில் நேரடியாகவும், இலக்கிய வழியாகவும் செய்த சமயத் தொண்டுகள் சமுதாயத் தொண்டுகளாக விளங்கின. அவரின் பணியை இன்றும் அவர் நிறுவிய மடங்களிலே காணக்கூடியதாக உள்ளது.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. குமரகுருபர சுவாமிகளின் பெற்றோர் யாவர்?
2. குமரகுருபரருக்கு பேச்சாற்றல் வந்த திருத்தலம் எது?
3. பேச்சாற்றல் வந்ததும் அவர் பாடிய முதல் பாடல் எது?
4. குமரகுருபரரால் அமைக்கப்பட்ட திருமடங்கள் இரண்டு தருக?
5. குமரகுருபரர் ஆற்றிய சமயப் பணிகள் பற்றிக் கூறுக?

**செயற்பாடுகள்**

01) குமரகுருபரர் இயற்றிய நூல்களை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக

**பாடச்சுருக்கம்**

- குமரகுருபரர் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு செய்தவர்களுள் சிறப்புடையவராவார்.
- வட இந்தியாவிற்கும் தமிழின் பெருமையை எடுத்துச் சென்று நிலை நிறுத்தினார்.
- வடஇந்தியாவில் ஒன்று தென்இந்தியாவில் ஒன்று என இரு மடங்கள் அமைத்து சைவத்தொண்டாற்றினார்.